# திராவிடன்

ஆசிரியர்
என்.வி.நடராசன்

R.T.ARASU




# காந்தியாருக்குப் பிறகு பெரும் போர் நடத்திய கட்சியிருந்தால்காட்டுங்கள்! அந்த திக்கு நோக்கி தெண்டனிடுகிறேன்!

## ஐயாயிரம் கிளைகளுடைய நாம் அவசரப்பட்டு செயல்படக்கூடாது!

## போதுமான விளக்கங்கள் தரப்பட்டுவிட்டன—போர் முழக்கம் எழுப்ப, வீரரே திரள்வீர்!

## சென்னை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அறிஞர் அண்ணா போர்க்குரல்!

"இந்த மாநாட்டுக்கு என்னைத் தலைமைதாங்கி நடத்திக் கொடுக்கு மாறுபேசியவர்கள், ஒரு அண்ணனுக்குத் தம்பிகள் சொல்லவேண்டிய புகழுரைகளையெல்லாம் மிக நீண்டமுறையில் என்னை வைத்துக்கொண்டே சொன்னார்கள்.

நான், "மாநாட்டுத் தலைவர் அவர்களே!" என்று பேசிப் பழக்கப்பட்டவனே தவிர, மாநாட்டுக்குத் தலைமைதாங்கிப் பழக்கப்பட்டவனல்ல.

இது சாதாரணமாக, மாநாடு கூட அல்ல; சேலம், தஞ்சை திருச்சி ஆகிய இடங்களில் நடந்த மாநாடுகளில் நாம் பேச வேண்டியதெல்லாம் பேசியாகி விட்டது; விளக்கவேண்டியதெல்லாம் விளக்கியாகிவிட்டது.

சென்னையில் நடைபெறும் இந்த மாநாட்டில் போர்த்திட்டங்களை நான் அறிவிப்பேன் என்று எதிர்பார்த்துத்தான் நீங்களெல்லாம் கூடியிருக்கிறீர்கள்.

சென்னையில் உள்ளவர்கள் மட்டுமின்றித் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் மிக்க ஆவலோடு நீங்களெல்லாம் வந்திருக்கிறீர்கள்.

காலையில் நடந்த எழுச்சி மிக்க ஊர்வலமும், பெருந்திரளாக இங்கே நீங்கள் கூடியிருப்பதும், தி. மு. கழகத்திடம் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறது.

காலை 10-மணிக்குக் கிளம்பிய ஊர்வலம், 6 கல் தொலைவு வேகாத வெயிலில் பல பாதைகளைக் கடந்து நடந்து வந்துசேர மணி 2 ஆயிற்று. நானும் ஒரே இடத்தில் (ஊர்வலத்தில்) இவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்து பழக்கப்பட்டவனல்ல! உங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களைக் கண்டு உருகாத மனம் படைத்தவனுமல்ல நான்!

இந்த மாநாட்டுக்காக எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியும், காட்டிய உற்சாகமும் என் உள்ளத்தை உருக்குகிறது! இந்த மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற நல்ல பல தோழர்களின் துணையோடும் மிகக் குறுகிய காலத்திலும் ஏற்பாடுகளைச் செய்த நீலநாராயணன் அவர்கட்கும், மற்ற எல்லா நண்பர்கட்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்களெல்லாம் இவ்வளவு தூரம் தொல்லைகள் பல ஏற்றுக் கொண்டு வந்திருப்பது எனக்குப் புதிய உற்சாகத்தை அளிக்கின்றது.

அரசாங்கத்துடன் நெருங்கிய உறவு வைத்துக்கொண்டிருப்பதாகக் கூறும் ஒருவர், ஒரு வாரத்திற்கு முன்பு சொன்னார்—'மாநாட்டுக்கு வருவோர் அனைவரையும் அரசாங்கம் பிடித்து அடைத்துவிடத் திட்டமிட்டிருக்கிறது' என்று! அது உண்மையோ பொய்யோ—எனக்குத் தெரியாது.

அப்படியெல்லாம் பீதி இருந்தும்கூட, நீங்கள் சிறிதும் தயங்காமல் இவ்வளவு பேர் தைரியமாக வந்து கூடியிருக்கிறீர்கள்.

எல்லோரையும் பிடித்து அடைப்பது என்றால், நடக்கக் கூடிய காரியம் அல்ல! சிறையில் உள்ள நெருக்கடியை அறியாதவர்கள் கூற்றே ஆகும் இது!

திருநெல்வேலிச் சீமையிலிருந்து இங்கே வந்துபோகும் செலவு எனக்குத் தெரியாததல்ல. நம் தோழர்கள் சீமான் வீட்டுப் பிள்ளைகளும் அல்லர்! பாட்டாளிகளும், நடுத்தர மக்களும், வர்த்தகத் துறையில் பணியாற்றுபவர்களும்தான் நமது கழகத்தில் உள்ளவர்கள்! அப்படியிருந்தும், ரூ. 50—60 என்று பணத்தைச் செலவு செய்துகொண்டு இங்கு வந்திருப்பது எதைக் காட்டுகிறது?

"தி. மு. கழகம் மிக முக்கிய முடிவு எடுக்கப்போகிறது; தனது பரிகாரத்தை எடுத்துச் சொல்ல இருக்கிறது; பணச் செலவானாலும் நேரச் செலவானாலும், நாம் இந்த நேரத்தில் அங்கு இருக்க வேண்டும்; நமது உணர்ச்சியை எடுத்துக் காட்ட வேண்டும்" என்றுதான் வந்திருக்கிறீர்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

## தலையங்கம்

மலர். 17. 19—10—63 மாலை 12

# நவம்பர் 17; நமது வேண்டுகோள்

—[...]—

“ இந்தியை ஆதரிக்கும் சக்திகள், நேர்வழியில் தங்களால் சாதிக்க இயலாதவற்றை, இந்தியை புகுத்துவதன் மூலம் கொல்லைப்புற வழியில் சாதித்துக் கொள்வதை தடுக்க, தொடர்ச்சியான விழிப்புணர்ச்சி தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது”

— “இந்து” 15—10—63

“ இந்திமொழி பேசாத பகுதி மக்கள், தங்கள் எதிர்கால உரிமைகள், இந்தி ஆட்சிமொழியாவதால் பாதிக்கப்படும் என்று அஞ்சுவது நியாயமானதே ஆகும். இந்தியைப் புகுத்துவதை எதிர்ப்பதில் தி. மு, கழகத்திற்குப் போதிய காரணங்களும் நியாயமும் இருக்கின்றன என்றலும்...”

— “மெயில்” 15—10—63

“ நடுநிலைமை உணர்வுடைய எவரும், நாட்டின் பொது நலத்தைக் காட்டிலும், இந்தித் திணிப்பு இன்றியமையாதது என்று ஒருகாலும் கூறத்துணியார். எனவே வளமற்றதும், வரலாற்றுச் சிறப்பில்லாததுமான இந்தியைப் பெரும்பான்மை மக்கள் மீது அவர்கள் விருப்பத்திற்கு எதிராகத் திணித்து நாட்டின் ஒற்றுமையையும் முன்னேன்றத்தையும் குலைக்கும் தீவினையை அரசு உடனடியாகக் கைவிடுதல் தலையாய கடமையாகும். அவ்வாறின்றி ‘அறப்போர் புரிபவரைச் சட்டம் கவனித்துக் கொள்ளும் என்று கூறுதல் சிறிதும் பொருந்தாது. ஏனெனில் உணர்ச்சியற்ற சட்டத்தின் மூலம், உணர்வோடு—உள்ளத்தோடு, உயிரோடு, கலந்துள்ள தாய்மொழி ஆர்வத்துக்கு அணையிட முயலுதல் பொங்கியெழும் கருங்கடல் வெள்ளத்தை மணற்கரையால் தடுக்க முற்படுதற்கு ஒப்பாகும்”

—“தமிழ்நாடு” 16—10—63

“ இந்தி பேசாத ஊழியர்கள் பலவகைகளில் நிர்பந்திக்கப் 'படுகின்றனர் இப்பொழுது இருப்பவர்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்பந்தம் ஒருபுறமிருக்க எதிர்காலத்தைப் பற்றிய அவநம்பிக்கையையும் இப்போதைய போக்கு அதிகப்படுத்தியுள்ளது. இதை நல்ல முறையில் எடுத்துக்காட்டி செய்துள்ள எச்சரிக்கைகள் இதுவரை பயனளிக்காது போனது வருந்தத்தக்கது”

—“தினமணி” 16—10—63

“ மொழிச் சட்டத்தை உருவாக்குகையில் மத்திய சர்க்கார் ஹிந்தி வெறியர்களின் நிர்பந்தத்தை எதிர்ப்பதில் போதிய அளவு உறுதிகாட்டவில்லை. நமது எல்லைக்குள் புகுந்துள்ள சீனரை விரட்டியடிப்பதில் நம்மிடையுள்ள ஒற்றுமை இன்னும் உறுதி பெற வேண்டிய சமயம் இது. அதற்கு ஊறு விளைக்கத்தக்கமுறையில் மத்திய அரசாங்க மொழிச் சட்டம் நிறைவேறியிருப்பதும், மத்திய இலாக்காக்கள் பலவற்றில் ஹிந்தியைக் கட்டாயமாக்குவதும், தென்னிந்தியாவில் மட்டுமின்றி பல வட இந்திய ராஜ்யங்களிலும் கொடிய ஏமாற்றம் விளைத்திருக்கிறது. இந்தி பேசுவோர் மொத்த ஜனத்தொகையில் 40 சதவிகிதத்தினரே. அவர்களிலும் ஒருவர் பேசும் இந்தி மற்றவர்களுக்குப் புரிவதில்லை”

—“சுதேசமித்திரன்” 14—10—63

—மேலே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள், தி.மு. கழகம் அறிவித்த போர்திட்டத்தையொட்டி தமிழகத்தின் நாளேடுகள் தெரிவித்துள்ளவையாகும்.

எல்லா ஏடுகளும்—அவை காங்கிரஸ் சார்புடையவையானாலும், அல்லது நடுநிலைவகிப்பவையானாலும்—இந்தி திணிப்பினால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை, ஆபத்துக்களை நன்கு உணர்ந்திருக்கின்றன.

ஆனால் ... ...

எரிப்பது என்பது ஒரு கிளர்ச்சியா ?

“அரசியல் சட்டத்தை எரிக்கலாமா?”

தி. மு. கழகம் நடத்தும் போராட்டம் தேவைதானா ?

போராட்டத்தை தி. மு. கழகமா நடத்துவது ?

—என்பன போன்ற கேள்விகளை அவை எழுப்பாமல் இல்லை!

சென்னையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் பொது மாநாட்டில், போர்த் திட்டத்தை அறிவித்து உரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள், இதுபோன்ற கேள்விகளுக்கும், இன்னும் என்னென்ன ஐயப்பாடுகளை யாரார் எழுப்புவரோ அவற்றையெல்லாம் தானே அங்கு எடுத்துக் கூறி, தக்க விளக்கம் அளித்து—இன்றையத்தினம் சட்டம் ஒன்றைக் காட்டித்தான் இந்தியைத் திணிக்கின்றனர், இந்தி வெறியர்கள், ஆகவேதான் அரசியல் சட்டம் 17-வது பிரிவைக் கொளுத்த கழகம் முடிவு செய்துள்ளது—என்பதை மிக விளக்கமாக எடுத்துரைத்தார்.

நவம்பர் 17-ம் நாள் அறிஞர் அண்ணா அவர்கள், துவக்க இருக்கும் அறப்போர், எத்தகைய நியாயமான அடிப்படையின் பாற்பட்டது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

இந்தித் திணிப்பு என்பதும் அதை எதிர்ப்பது என்பதும் 1938-ம் ஆண்டு முதல், கால் நூற்றாண்டு காலமாக தமிழகத்துக்கும் இந்தி ஏகாதிபத்தியத்திற்கும் நடைபெற்றுவரும் பெரும் போராட்டமாகும்! இத்தகைய மகத்தானதொரு வரலாற்றுப்பின்னணி இருந்தும், தமிழர்களது மொழியுணர்வைத் துச்சமென மதிக்க இந்தி வெறியர்கள் முற்படுவது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும் !

நடுநிலையில் நின்று சிந்திக்கும் எவரும், தி. மு. கழகம் இன்றையதினம் துவக்க இருக்கும் அறப்போராட்டத்தை மேற்கொள்வதைத் தவிர வேறு வழி அதற்கில்லை என்பதை நன்குணர்வர்.

கழகம் மேற்கொண்டுள்ள அறப்போர் குறித்து நடுநிலையாளர்களும்—நல்லறிவாளர்கள் பலரும் நல்ல முடிவையே தெரிவித்துள்ளனர். இது கழகக் கோரிக்கையின் நியாயமான அடிப்படையையே எடுத்துக்காட்டுகிறது.

இவ்வளவு வேண்டுகோள்களும் — எடுத்துக்காட்டுகளும்—கடந்தகால தியாகங்களும்—வரலாற்றுப் பேருண்மைகளும் புறக்கணிக்கப்பட்டு இந்தி திணிக்கப்படுவது அவசியமென்று வாதிக்கப்படுமானல் அதிலே நேர்மை சிறிதளவும் இருப்பதாக யாரும் கருத மாட்டார்கள் !

ஆகவே அறிஞர் அண்ணா அவர்கள் நவம்பர் 17-ல், மேற்கொள்ள இருக்கும் அறப்போர் வெற்றி வாகை சூட,

நாட்டு மக்களே,
நல்லன்பு கொண்டோரே,
நல்லறிவாளர்களே,
நடுநிலையாளர்களே,

அனைவரும் ஆதரவளித்து, தமிழகத்தைக் கப்பியுள்ள இருளகற்ற ஒத்துழைப்பை நல்குவீர் என்று வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்.

இந்திமொழியைத் திணித்திடும் அரசினரும் இனிமேலாவது நிதானபுத்தியுடன் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து உடன் ஆவனசெய்திட முன்வரவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறோம்.

## போராட்டக்குழு பொறுப்பை செயற்குழு ஏற்கும்!

“இன்றோடு இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு கலைக்கப்படுகிறது. அந்தக் குழுவின் தலைவராகவும், உடனிருந்தும் சிறந்த முறையில் பணியாற்றி நல்ல யோசனைகளைச் சொல்லி எனக்கு உதவிபுரிந்த தம்பி கருணாநிதிக்கும், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கட்கும், அவர்களோடு உடனிருந்து ஒத்துழைத்த தோழர்களுக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

“என்னிடத்தில் போராட்டக் குழு, தன்னுடைய அறிக்கையை நேற்று கொடுத்ததுடன் அதனுடைய வேலைகள் முடிவடைந்தன. இனி இந்த போராட்டத்தை நடத்துவதற்கு தி. மு. க. தலைமைச் செயற்குழு பொறுப்பேற்றுக் கொள்ளும். ஏனெனில், போராட்டக்குழுவிலுள்ள ஆட்கள் குறைவு தலைமைச் செயற்குழுவிலுள்ள ஆட்கள் அதிகம். இதைக் கைதுசெய்து விட்டால், அதாவது, இருக்கட்டும், என்ற எண்ணந்தான்.”

—சென்னை மாநாட்டில் அண்ணா.

## தி. மா. மு. க. சட்ட திட்டக் குழு

திராவிட மாணவர் முன்னேற்றக்கழகம் நாட்டிற்கு ஆற்றிவரும் தூயபணி, நல்லவர் உள்ளங்களைத் தொட்டு உள்ளது; நாட்டுப் பற்றுக் கொண்டோரிடமிருந்து ஆதரவைத் திரட்டி உள்ளது. இதைக் கண்டு பூரிப்படையும் மாணவர் கழகம், தங்கள் எதிர்காலம் நல்லதாக அமைய—தனக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவுபடுத்த—அரசியல் சிக்கல்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள—பெற்றோர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் மாணவர்கள் மீதுள்ள நல்லெண்ணத்தை வளர்க்க—மாணவர் கழகத்தை கட்டுக்கோப்புடன் நடத்திச் செல்ல ஒரு சட்டத் திட்டம் தேவைபடுகிறது.

அத்தகைய சட்டதிட்டத்தை உருவாக்கித் தருமாறு திரு. எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ., பி. எல். அவர்களை செயலாளராகவும், தோழர்கள் என். வி. என். சோமு பி. ஏ., ஜி. சோமசுந்தரம் பி. ஏ. மைனர் மோசஸ் பி.ஏ., பி. எல். உ. கணபதி எம்,ஏ. ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டு உள்ளது.

இக்குழு, தங்களுக்கிட்ட பணியினை ஒரு திங்களுக்குள் வெற்றிகரமாக முடித்துத் தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

**எஸ். டி. சோமசுந்தரம்**

பொதுச்செயலாளர், தி. மா. மு. கழகம்
126, மவுண்ட்ரோடு, சென்னை—6.

# நவ.17 முதல் நாடெங்கும் அறப்போர்

1963 நவம்பர் 17-ம் நாள் துவங்குகிற இந்தி எதிர்ப்பு அறப் போர் 1965 சனவரிவரை தொடர்ந்து நடைபெறும்.

அரசியல் சட்டம் 17-வது பிரிவு எரிப்பும், இந்தி திணிக்கப் படுகிற மத்திய அரசுப் பணிமனைகளின் முன்பு மறியலும் மாறிமாறி நடந்துக்கொண்டே இருக்கும்.

முதலில் சென்னையிலும், பிறகு மாவட்டங்களின் முக்கிய நகரங்களிலும், மாநிலங்களின் முக்கிய நகரங்களிலும் அடுத்தடுத்து போராட்டம் தொடரும்.

போராட்டத்தில் ஈடுபடுகிற தோழர்களின் பெயர்களும், போராட்டம் நடக்கும் நாட்கள்—இடங்கள் ஆகிய விவரங்களும் அடியிற் கண்ட பட்டியலில் தரப்பட்டுள்ளன.

எரிப்புப் போரிலும் சரி—மறியல் போரிலும் சரி ஈடுபடுகிற ஒவ்வொரு அணியும் ஐந்துபேர்களை கொண்டதாக இருக்கும்; இதற்கு, 'ஐவர் அணி' என்றே பெயரிடப் படும்.

போராட்டக் களத்திற்குச் செல்லுமுன், போராட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டு விட்டால், வேறொரு அணி போராட்டத்தில் ஈடுபடும்.

தடுப்புக்காவல் சட்டபடி முன்கூட்டிக் கைது செய்யப்பட்டு விட்ட போராட்ட வீரர்கள் சில நாட்கள் கழித்து வீடுதலை செய்யப் பட்டால், நேரே வீட்டுக்குச் செல்லமாட்டார்கள்; தாங்கள் நடத்த இருந்த போராட்டத்தை நடத்திவிட்டு மீண்டும் சிறைக்குத்தான் செல்வார்கள்.

**எரிப்புப் போருக்கும் மறியல் போருக்கும் இடையேயுள்ள நாட்களில் போராட்டத்தை விளக்கி தீவிரப் பிரசாரம் நடைபெறும்.**

**சட்டப்பிரிவு எரிப்பு போராட்டம் நடைபெறும் நாள் ஞாயிற்றுக் கிழமையாகவே இருக்கும்.**

போராட்டப் பட்டியல் இதோ :—

### சென்னை

17—11—63
அரசியல் சட்டம்
17-வது பிரிவு எரிப்பு
அண்ணா
டி. கே. பொன்னுவேலு பி.ஏ.
வி. வெங்கா
டி. எம். பார்த்தசாரதி
கே. பி. சுந்தரம்
(நவ. 30 வரை பிரச்சாரம்)

**1-12-63 முதல் 14-12-63 வரை.**
**மத்திய அரசாங்க அலுவலகங்களின் முன் மறியல்.**
கே.ஏ. மதியழகன் பி.ஏ.எம்எல்ஏ
க. அன்பழகன் எம்.ஏ.,எம்எல்சி
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
மற்றும் தோழர்கள்.

### மதுரை

**15-12-63 சட்டப் பிரிவு எரிப்பு**
எஸ். முத்து எம்.சி.
திருஞானம்
மு. காதர்சா பி.ஏ.
மற்றும் தோழர்கள்

**1-1-64 முதல் 12-1-64 வரை**
**மறியல்**
சொ. காவேரிமணியம் பி.ஏ.பி.எல்
கு. திருப்பதி பி.ஏ.பி.எல்.
மற்றும் தோழர்கள்

### காஞ்சீபுரம்

(செங்கற்பட்டு மாவட்டம்)
**19-1-64 சட்டப் பிரிவு எரிப்பு**
ஏ. கோவிந்தசாமி
மற்றும் தோழர்கள்

**1-2-64 முதல் 14-2-64 வரை**
**மறியல்**
பி. சிவசங்கரன் எம்.பி.
சி. வி. எம். அண்ணாமலை
மீஞ்சூர் கேசவன்
கே. டி. எஸ். மணி
பூவிருந்தவல்லி சின்னசாமி
மா. பொ. வேதாசலம்

### திருச்சி

**16-2-64 சட்டப் பிரிவு எரிப்பு**
குளித்தலை முத்துகிருஷ்ணன்
மற்றும் தோழர்கள்

**1-3-64 முதல் 14-3-64 வரை**
**மறியல்**
இரா. செழியன் எம். பி.
அன்பில் தருமலிங்கம் எம்.எல்.ஏ
டி. பி. அழகமுத்து எம்.எல்.ஏ
எம். எஸ். மணி எம்.எல்ஏ.
வெங்கலம் எஸ். மணி எம்எல்ஏ
அ. தியாகராசன் எம்.எல்.ஏ
பி. முருகையன் எம்.எல்.ஏ.

### கடலூர்

(தெ. ஆ. மாவட்டம்)
**15-3-64 சட்டப் பிரிவு எரிப்பு**
இரா. சாம்பசிவம்
ஏ. வி. தண்டபாணி

**1-4-64 முதல் 14-4-64 வரை**
**மறியல்**
டி. டி. இராமபத்திரன் எம்.பி.
தில்லை வில்லாளன் எம்.ஏ.பி.எல்
இரெ. இளம்வழுதி எம்.ஏ.பி.எல்
வி. கிருஷ்ணமூர்த்தி எல்.எல்.ஏ.
வி. வி. சுவாமிநாதன் பி.எஸ்.சி.பி.எல்.
ஆ. தங்கவேலு எம்.எல்.ஏ.
எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
எம். சண்முகம் எம்.எல்.ஏ.
என். இராஜாங்கம் எம்.எல்.எ.
பாலகிருஷ்ணன் எம்.எல்.எ.
எம். செல்வராஜ் (முன்னாள் எம்.எல்.எ.)
எம். ஆனந்தன் (முன்னாள் எம்.எல்.எ)
பொன். சொக்கலிங்கம்

### நெல்லை

(நெல்லை மாவட்டம்)
**19-4-63 சட்டப் பிரிவு எரிப்பு**
மீ. சு. இளமுருகு பொற்செல்வி
எம். மஸ்தான்
சந்திரபால்
கே. முத்து
முகமது மீரான்

**1-5-64 முதல் 14-5-64 வரை**
**மறியல்**
எம். எஸ். சிவசாமி
இரத்தினவேல் பாண்டியன், பி.எ.,பி.எல்.
மற்றும் தோழர்கள்

### கோவை

**17-5-64 சட்டப் பிரிவு எரிப்பு**
மு. இராமநாதன்
காட்டூர் கோபால்
மற்றும் தோழர்கள்

**1-6-64 முதல் 14-6-64 வரை**
**மறியல்**
இரா. நெடுஞ்செழியன், எம்.எ.எம்.எல்.எ.
எஸ். ஏ. இராசமாணிக்கம்
சானகிராமன்
ப. கோபால்
எஸ். பி. இராசு
தே. கு. மெய்யப்பன்.

### நாகர்கோவில்

(குமரி மாவட்டம்)
**21-6-64 சட்டப் பிரிவு எரிப்பு**
பி. எம். கண்ணு
மற்றும் தோழர்கள்

**1-7-64 முதல் 14-7-64 வரை**
**மறியல்**
கி. மனோகரன், எம்.எ.,எம்.பி.
மற்றும் தோழர்கள்

### தஞ்சை

**19-7-64 சட்டப் பிரிவு எரிப்பு**
மு. கருணாநிதி, எம். எல். ஏ.
மன்னை. நாராயணசாமி
என். கிட்டப்பா
எஸ் நடராசன்
அ. நடராசன்

**1-8-64 முதல் 14-8-64 வரை**
**மறியல்**
கோ. சி. மணி, எம்.எல்.ஏ.
பேராவூரணி கு. அடைக்கலம்
மற்றும் பலர்

### சேலம்

**16-8-64 சட்டப் பிரிவு எரிப்பு**
ஜி. பி. சோமசுந்தரம்
சிற்றுளி சுப்பிரமணியம்
மற்றும் தோழர்கள்

**1-9-64 முதல் 14-9-64 வரை**
**மறியல்**
ஈ. ஆர். கிருஷ்ணன்
க. இராசாராம் பி.எ.,எம்.பி.
ஆறுமுகம் எம்.எல்.எ.
எஸ். ஏ. அன்புக்கரசு
வேலம்மையார் எம்.எ.

### அருப்புக்கோட்டை

(இராமநாதபுரம்)
**20-9-64 சட்டப் பிரிவு எரிப்பு**
எஸ். எஸ். தென்னரசு
உ. பில்லப்பன் எம்.எ.
எஸ். பி. தங்கவேலு
மற்றும் தோழர்கள்.

**1-10-64 முதல் 14-10-64 வரை**
**மறியல்**
செ. மாதவன் எம்.எல்.எ.
மாங்குடி மதியழகன்
எம். எஸ். இராமசாமி
சீனிவாசன் எம்.எ.
ச. அமுதன் பி.எ.

### வேலூர்

(வட ஆற்காடு)
**18-10-64 சட்டப் பிரிவு எரிப்பு**
வி. டி. அண்ணாமலை
பி. எஸ். சந்தானம் (முன்னாள் எம்.எல்.எ.)
மற்றும் தோழர்கள்

**1-11-64 முதல் 14-11-64 வரை**
**மறியல்**
இரா. தர்மலிங்கம் எம்.பி.
அரூர் முத்து எம்.பி.
சத்தியவாணிமுத்து
ப. உ. சண்முகம் எம்.எல்.எ.
முருகையன் எம்.எல்.எ.
எம். ஏ. செயவேலு பி.எஸ்சி.,பி.எல்.
காஞ்சி. மணிமொழியார் எம்.எல்.எ.
புலவர் கோவிந்தன் எம்.எல்.எ.
செ. கோ. விஸ்வநாதன் எம்.எல்.எ.
போளூர் சுப்பிரமணியம்
ஏ. பி. சனார்த்தனம் எம். எ.
ஏ. சி. நரசிம்மன் எம்.சி.

### சித்தூர்

(ஆந்திர மாநிலம்)
**20-11-64 முதல் 24-11-64 வரை**
**மறியல்**
வெ. நரசிம்மலு எம்.சி.
எம். பி. வீராசாமி
எஸ். வி. டி. வேலன்

### பெங்களூர்

(கர்நாடக மாநிலம்)
**26-11-64 முதல் 30-11-64 வரை**
**மறியல்**
தி. திராவிடமணி
எஸ். ஜே. உசேன்
கி. சோழன்
சம்பங்கி இராமையா

### திருவனந்தபுரம்

(கேரளம்)
**2-12-64 முதல் 5-12-64 வரை**
**மறியல்**
எம். என். புருஷோத்தமன்
மற்றும் தோழர்கள்

**குறிப்பு : ஆந்திர, கருநாடக, கேரள மாநிலங்களில் அரசியல் சட்டம் எரிப்பதற்குத் தண்டனை கொடுக்கச் சட்டம் இல்லையாகையால் அங்கெல்லாம் எரிப்புப் போராட்டம் இல்லை; மறியல் மட்டுமே நடக்கும்.**

### சென்னை

**6—12—64 : சட்டப் பிரிவு எரிப்பு**
என். வி. நடராசன்
நீலநாராயணன்
வி. முனுசாமி
அ. செல்வராசு
சிட்டிபாபு எம்.சி.

**21-12-64 முதல் 1-1-65 வரை**
**மறியல்**
அ. பொ. அரசு எம்.சி.
சடகோபன் எம்.சி.
மற்றும் தோழர்கள்

## சென்ற இதழில்...

மிசினம் அருகில் நங்கூரம் பாய்ச்சப்பட்ட பாம்பேயின் கப்பலில் இன்னிசையுடன், நல்ல மதுவுடனும், கங்கையரின் நடன முடனும் கூடிய விருந்தில் அன்டோனி, சீசர், பாம்பே, லெபிடஸ், அக்ரிப்பா மாசினுஸ், எனேபார்பஸ், மிசினுஸ் ஆகியோர் ஈடுபட்டிருக்கின்றனர்.

மேனஸ் என்பவன் பாம்பேயை தனியாக வரும்படி அழைத்து உலகத்தின் முப்பெரும் மூவேந்தர்கள் கூடியிருக்கும் இந்த நேரத்தை பயன்படுத்திக் கொண்டு, அவர்களை அடியோடு அழித்து உலகத்தின் தலைவனுகலாம் என்ற ஆசையை மூட்டு கின்ருன். பாம்பே அதற்கு மறுக்கின்ருன்.

சிரியாவில் அன்டோனியின் படைவீரர்கள் தாங்கள் அடைந்த வெற்றிச்செய்தியை தங்களது தலைவனிடம் அறிவிக்க ஏதென் சுக்குப் புறப்படுகின்றனர்.

ரோமில் அன்டோனியும்— ஆக்டேவியாவும் ஏதென்சுக்கு புறப்படுவதற்காக சீசரிடம் விடை பெறுகின்றனர்.........

ஃ

ஆக்டே : என் அருமை அண்ணு !...

அண்டோ : முத்து ஒளிவிடுகிறது அவள் கண்களில். அன்பு தரும் கண்ணீர் அது. தேற்றிக்கொள், ஆக்டேவியா.

ஆக்டே : ஐயா, என் கணவனின் வீட்டை நன்கு பார்த்துக்கொள்ளுங்கள்.

சீசர் : என்ன, ஆக்டேவியா ?

ஆக்டோ - வாருங்கள் காதில் சொல்கி றேன்.

அண்டோ : அவள் வாய் எண்ணத்தைச் சொல்ல முடியவில்லை. எண்ணமும் சொல்ல துாண்டவில்லை. பொங்கும் அலைகளின் நடுவே அகப்பட்ட அன்னம் இப்பக்கமோ அப்பக்கமோ போகமுடிய வில்லை. அதுபோல்தான் அவளும்.

எனே : (அக்ரிப்பாவிடம் தனியாக) சீசர் அழுவாரா ?

அக்ரி : முகம் அப்படிதான் தெரிவிக் கிறது.

எனே : அழுவாரா! ஐய்யே!

அக்ரி ; ஏன்? பிலிப்பிலே புருடஸ் ஜூலி ய்ஸ் சீசரை கொலை செய்த பிறகு அதைக் கண்ட அண்டோனி குலுங்கி, குலுங்கி அழவில்லையா?

எனே : ஓ! அது வேறு! அப்பொழுது அவர் சரியாக இல்லை.

சீசர் : இல்லை, அன்பு ஆக்டேவியா! உன்னை மறக்கமாட்டேன்.

அண்டோ ; வாருங்கள் ஐயா! நம் அன்பு கொண்டு போரிடுவோம்! இதோ நான் உங்களைப் பிடித்துவிட்டேன். விட்டு விடுகிறேன்.

சீசர் : மகிழ்ச்சி பெருகட்டும்.

லெபி : வானத்திலேயுள்ள விண் மீன்க ளெல்லாம் உங்களுக்கு ஒளிகாட்டி வழி சொல்லட்டும், மகிழ்ச்சியுண்டாகட்டும்.

சீசர் : சென்று வாருங்கள், வணக்கம்.

[ஆக்டேவியாவை முத்தமிட்டு அனுப்புகிருர்.]

அண்டோ : வணக்கம்.

[தாரை முழங்குகின்றது. எல்லோரும் போகின்றனர்.]

### காட்சி 3

[அலெக் சாண்டிரியா. அரண்மனை யில் ஓர் அறை.

கிளியோபாட்ரா, சார்மியான், ஐராஸ், அலெக்சாஸ் நுழைகின்றனர்.]

கிளியோ : எங்கே அவன்.

அலெக் : மிக்கப் பயப்படுகிருன் வருவ தற்கு.

கிளியோ : போ. போய் அவனை அழைத்து வா. சீக்கிரம் வா ஐயா!

[துாதன் ஒருவன் வருகிருன்]

அலெக் ; அருமைத் தலைவி! ஜூலியரின் இராட் நம்மை மதிக்கமாட்டேன் என் கிருன். தாங்கள் விரும்பினுல் தலையைக் கொய்து தரைமட்டமாக்கலாம் அவன் படையை.

கிளியோ : வீம்பு செய்யும் அவ்வீணனை வீழ்த்திவிடலாம். அவன் தலை தரையை முத்தமிடச் செய்துவிடலாம். இரத்த சேதம் அதிகமின்றி. ஆனுல் இப் பொழுது எப்படி செய்வது? அண்டோனி ரோமிற்கு சென்றிருக்கிருரே. என் சுட்டு விரல் அசைவுக்கு ஜெகமெல்லாம் ஜெயித்து வந்து என் காலடியில் கிடத் தக் கூடிய என் அண்டோனி அருகில் இல்லையே. என் கடைக்கண் வீச்சுக் காகக் காத்திருக்கும் காதலர் கடுந் துாரத்திலல்லவா இருக்கின்ருர் — இங்கு என் அருகில் வா!

துாதன் : வருகிறேன் தலைவி!

கிளியோ : ஆக்டேவியாவைப்பற்றி சேதி கள் சேகரித்துக்கொண்டு வந்தாயா?

துாதன் : கொண்டுவந்தேன் கோமகளே!

கிளியோ : எங்கே ?

கிளியோ : அம்மையாரே! நான் ரோமில் அவளைக் கண்டு வந்தேன். அவள் முகத்தைக்கூடப் பார்த்தேன். அவள் தமையடனும் மார்க் அண்டோனியுட னும் வருகையில் கண்டேன்.

கிளியோ ; அவள் என்னைப் போன்று உயரமாக இருக்கின்ருளா?

துாதன் : அவ்வளவு உயரம் இல்லை அம்மையே!

கிளியோ : அவள் பேசும்போது கேட்டி ருக்கிருயா, அவள் குரல் எப்படி யிருக் கிறது கீச்சுக் குரலாக யிருக்கிறதா, மெதுவாக உள்ளதா ?

துாதன் : அம்மா அவள் பேசும்போது கேட்டிருக்கிறேன். அவள் குரல் மெல் லியதாகத்தான் உள்ளது.


கிளியோ ; அது அவ்வளவு நன்றன்று. அவர் அவளிடம் அதிக நாட்கள் தங்க மாட்டார். அவளை விரும்புவதும் அப்ப டியேதான்.

சார் : விரும்புவதா? ஓ ஐசிஸ்! அது எப் படி முடியும்.

கிளியோ : நான் அப்படி நினைக்கிறேன் சார்மியான். கட்டைக்குரலும், குள்ள மான உருவமும் கொண்ட அவளிடம் என்ன கம்பீரம் இருக்கப் போகின்றது. கம்பீரமில்லாவிட்டால் அழகேது, கவர்ச்சி ஏது ?

துாதன் : அவள் நடப்பது அவ்வளவு நளினமாகயில்லை. அவள் நடப்பது நத்தை ஊர்வது போன்று சொத்தையாக உள்ளது. சொகுசு அவளிடம் இல்லை. துடியிடை துவள, அன்ன நடை நடப் பதை அவள் அறிந்திருக்கவே மாட் டாள். அவள் நடப்பதும், நிற்பதும் ஏறக்குறைய ஒரே மாதிரி உள்ளது. அவள் மனித இனத்தைச் சேர்ந்தவளாக யிருந்தாலும் ஜீவனற்ற தந்தப் பதுமை போன்று இருக்கிருள். மூச்சு விடும் மனித உருவாக இன்றி கற்சிலை ஒன்று எப்படி உணர்ச்சியற்று இருக்குமோ அப்படி இருக்கிருள்.

கிளியோ: உண் மை யாகவா ! உறுதி யாகவா கூறுகிருய். நான் நம்ப லாமா?



# இப்படியும் ஒரு யாத்திரை!

மேற்கு வங்காளத்தில் பூஜ்யர் விஞேபாஜி ஒரு பாதயாத்திரை நடத்தினர். இந்த யாத்திரைக்காக மேற்கு வங்காள அரசுசெலவுசெய்தது எவ்வளவு தெரியுமா?

**55,465 ரூபாய்!**

இதில் விஞேபாஜியின் முதல் பிரார்த்தனை கூட்டத்திற்கு 15,000 ரூபாய் சில விடப்பட்டிருக்கிறது. சாப்பாட்டுச் சிலவு 12,000 ரூபாய்! பெட்ரோலுக்கும், கார் போக்குவரத்துக்கும் சேர்த்து 20,465 ரூபாய் வேறு! இந்த அளவு பூஜ்யரோடு அவரது பரிவாரங்கள் போயிருக்கின்றன! காந்தியத்தின் அவதாரமல்லவா, விஞேபாஜி? இப்படி பிரமாண்ட அளவில் பாத யாத்திரை நடத்த வேறு யாரால் முடியும்?

ஃ

யார் செய்த குற்றமோ, எப்படி நேர்ந்த பழுதோ தெரியவில்லை; குடியரசுத் தலைவர் பதவிப்பீடத்தை வடிகட்டிய பிற்போக்குத்தனம் விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னர் அந்த பதவியில் இருந்தவர் ஐந்தாறு பரதேசிகளை இழுத்துக் கொண்டுவந்து உட்கார வைத்து அவர்களது பாதாரவிந்தங்களை தண்ணீரால் கழுவி, தலையில் அட்சதையாக தெளித்துக்கொண்டார்! 'பழையவரே தேவலை' என்று நினைக்குமளவுக்கு புதியவரின் போக்கு இருக்கிறது! 'வைக்கவுண்டில்' பறந்துவந்து சங்காராச்சாரியார் செருப்பு எங்கே என்று தேடிப்போகிருர்! கூட வந்த உத்தியோகஸ்தர்களுக்கு ராமேசுவர 'ஸ்நானம்' செய்ய உத்தரவு வேறு!

திருநாம மகிமை, தேவாரப் பாட்டு, தோத்திரங்கள் இப்படிப்பல......

இதுகளைப் பார்க்குபோது பழைய நினைப்பெல்லாம் வருகிறது. காந்தியார் ஒரு முறை சொன்னர், அவருக்கே உரிய ஓரிஜினலிட்டி பாஷையில்.

"எத்தனை ரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடினாலும் இந்தியா ஒரு இந்து ராஜ்யமாகவே விளங்க பாடுபடுவேன்!" என்று. இவ்வளவுதான்! பக்கத்திலிருந்த விடுதலை வீரர்—புரட்சித்தலைவர் பண்டிதருக்குப் பொறுக்கவில்லை! "எத்தனை ரத்த ஆறுகள் ஓடினாலும் இந்த நாட்டை இந்து ராஜ்யமாக்க ஒப்பவேமாட்டேன்!" என்று 'கர்ஜனை' புரிந்தார்.

காந்தியார் இப்போது இல்லை, அவர் விதைத்துப்போன விஷவித்து எத்தனை கிளைகளைப் பரப்பி பிரமாதமாக வளர்ந்திருக்கிறது!

இந்த லட்சணத்தில்' மத சார்பற்ற அரசாங்கம் என்பதற்கு ராஷ்டிரபதியின் திவ்யமான பாஷ்யம் வேறு! எல்லா மதங்களுக்கும் சுயேச்சையாக இணைந்து போவதுதான் மதசார்பற்ற அரசாங்கமாம்! சரி, சுவாமி, தங்களைப் போன்ற பெரிய பெரிய புள்ளிகள் அவரவர்களுக்கும் பிடித்தமான மதச்சடங்குகளில் கலந்து கொண்டால், அது முன்னர் இருந்த சாதரண நிலைதானே! 'மத சார்பற்ற அரசாங்கம்' என்ற 'ஜம்பம்' எதற்கு?

தங்களைப்போன்று, வேறு பல பதவிகளில் இருக்கும் கிருத்துவர்களும், முஸ்லீம்களும், தேவாலயங்களையும், பள்ளி வாசல்களையும் தேடிக்கொண்டு போனல் என்ன ஆவது?

அதுதான் போகட்டும்; அப்படி ஏதாவது 'சத் கருமங்கள்' செய்ய வேண்டும் என்று உங்களுக்கு இருந்தால், சென்னையிலிருக்கும் வீட்டில் பண்டாரங்களை எல்லாம் கூட்டிவந்து பகவத் நாமத்தை பாராயணம் செய்யவேண்டியதுதானே! ராஷ்டிரபதி பவனில் கூட கூடாது; அது சர்க்கார் செலவில் நடக்கிறது! ஏராளமான பரிவாரங்கள், போலீஸ் பாதுகாப்பு, தடபுடல் ஏற்பாடுகள்; இவற்ருேடு சர்க்கார் சிலவில் திருக்கோயில் வலம் வருவதுதான் மத சார்பற்ற குடியரசுத் தலைவரின் வேலை என்ருல், தங்கள் வேதாந்த புத்தியில் எங்கோ 'தகராறு' ஏற்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்!

நீங்கள் பரிவாரங்களுக்கு 'புண்ணியம்' பற்றி உபதேசம் செய்தீர்களே, அந்த பரிவாரங்களில் ஒரு முஸ்லீமோ, ஒரு கிருத்துவஞே இருந்திருந்தால் அவர்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! ஒரு வேளை, 'ஜாதி இந்துக்களைத்தான்' நீங்கள் உங்களோடு கூட்டிச் செல்வீர்களோ, என்னவோ?

எண்ணறக்கற்று, எழுத்தறப்படித்திருந்தாலும் தங்களின் போக்கு சாமான்ய அறிவுக்குக்கூட தவறு என்றே படுகிறது! புண்ணியம் தேடுங்கள்! மகராஜனுகத் தேடுங்கள்! ஆனல் சர்க்கார் செலவில் தேடாதீர்கள்! அது பலிக்காது, சுவாமி!

சேரன்தம்பி

தூதன் : உண்மையாக இல்லாவிட்டால் எனக்கு இதையும் கவனிக்கத் திறன் இல்லை என்று அருத்தம் ஆகும்.

சார் : மூவர் எகிப்தில் இதைவிட மேலான துப்பு துலக்க முடியாது ஒப்புக்காகச் சொல்லவில்லை.

கிளியோ : அவனுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. நன்ருகத்தான் கவனித்திருக்கிருன். அதற்கு மேல் அவளைப் பற்றி வேறு விவரம் இல்லையா—அவன் ஆளை எடை போடுவதில் மிக்க வல்லவன் என்று எண்ணுகிறேன். அதில் எனக்கு சந்தேகமேதுமில்லை.

சார் : மிக்க உயர்ந்த முறையில் எடை போடுகிருன். அதில் சந்தேகம் ஏது.

கிளியோ ; அவளுடைய வயது என்ன இருக்கும். நீ எவ்வளவு இருக்கும் என்று நினைத்தாய்.

தூதன் : அவள் ஓர் விதவை.

கிளியோ : அப்படியா!

தூதன் : முப்பது வயதிருக்கலாம்.

கிளியோ : அவள் முகம் பெரியதாக நீண்டிருக்கிறதா, குட்டையாக இருக்கிறதா?

தூதன் : கவர்ச்சியற்று குட்டையாக இருக்கிறது.

கிளியோ : தலைமயிர்?

தூதன் : கருமை கலந்த சிகப்பு நிறம். அவள் நெற்றி கூட குறுகலாக இருக்கிறது.

கிளியோ : அங்கே வேண்டிய பொன் வாங்கிக் கொள். உன் வேலை நிரந்தரமானது. சரி போ. கடிதங்கள் தயாராயிருக்கின்றன.

[தூதன் போகிருன்]

சார் : சரியான ஆள்.

கிளியோ : நல்ல ஆள்தான் பாவம். அவனைத் துன்புறுத்தி விட்டேன். இன்னும் கூட கேட்கலாம் என்றிருந்தேன். பரவாயில்லை. பிறகு பார்க்கலாம். எல்லாம் இனி நல்லவைதான்.

சார் : நானும் அதையே எண்ணுகிறேன்.

[போகிருர்கள்]

## காட்சி 4

[ஏதென்ஸ் அண்டோனியின் மாளிகையில் ஓர் அறை. அண்டோனியும், ஆக்டேவியாவும் வருகின்றனர்.]

அண்டோ : இல்லை ஆக்டேவியா. அது மட்டுமில்லை. அதேபோன்று ஆயிரமாயிரம் காரணங்கள் உண்டு. பாம்பே மீது போரிட்டார்; உயில் எழுதினர், அதைப் படித்தும் காட்டச் செய்தார் மக்களிடம். என்னைப்பற்றி குறை கூறினராம். எனக்கு மரியாதை கொடுப்பது தவிர்க்க முடியாதாகையால் அவர் அப்படி செய்தார்.

ஆக்டே ; என் அருமை தலைவ! எல்லாவற்றையும் நம்பி விடாதீர்கள். நம்பினலும் கோபம் கொள்ளாதீர்கள். பிரிவு வர நேர்ந்தால் நான் என்ன செய்வேன்? இருபக்கமும் வேண்டியவர்கள். கடவுள் என்ன செய்வார், நான் இருவருக்கும் பிரார்த்தனை செய்தால் "என் கணவனைக் காப்பாற்று" என்றும், "என் அண்ணனை அருள் பாலிப்பாயாக" என்றும் நான் வணங்கினல் என்ன ஆகும். கணவன் வெற்றி பெறவேண்டும், அண்ணன் வெற்றி பெறவேண்டுமென்ருல் சிரிக்கமாட்டார்களா?

அண்டோ : ஆக்டேவியா! உன் அன்புக்கு நன்றி. என் சுயமரியாதை போய் விட்டதென்ருல் நான் போனமாதிரிதான். ஆதலால் உன்னுடையவனுக நான் இருப்பது சரியல்ல. நீ வேண்டுவதினல்

எங்கள் இருவர் நடுவில் சமரசம் செய்ய முயற்சித்துப் பார். அதற்குள் நான் போருக்கு ஆயத்தம் செய்யவேண்டும். நீ விரைவாகப் போ. உன் விருப்பப்படி நீ செய்யலாம்.

ஆக்டே : நன்றி! நண்பரே. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. போர் உங்கள் இருவருக்கும் நடந்தால், அதில் இறந்தவர்களாவது அவர்கள் இரத்தத்தால் உங்களைப் பிணைத்து வைக்கட்டும்.

அண்டோ : இதன் மூலகர்த்தா யார் என்று நீ நினைக்கிருயோ அவரை நீ வெறுக்கலாம். எங்கள் குற்றங்கள் ஒரே மாதிரியில்லாவிட்டாலும் உன் அன்பு இருவருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறது. நீ மகிழ்ச்சியுடன் போகலாம். யார் துணைக்கு வேண்டுமோ அவர்களை அழைத்துச் செல்.

[இருவரும் போகிருர்கள்.]

## காட்சி 5

[அதே மற்ருேர் அறை. எனே பிறர் பசும், இராஸம் வந்து, ஒன்று சேர்கின்றனர்.]

எனே : என்ன, இப்பொழுது இராஸ்?

இரா : அதிசயமான சேதி ஐயா!

எனே : என்ன ஐயா ?

இரா : சீசரும், லெபிடசும் பாம்பே மீது போர் தொடுத்திருக்கின்றனராம்.

எனே : பழைய சேதிதான் பிறகென்ன?

இரா : பாம்பேவுடன் போரிட லெபிடசும் உதவி, பிறகு அந்த வெற்றியில் பங்குதர மறுக்கிருராம். அந்த போரில் கிடைத்த புகழைக் கூட அவருக்கு அளிக்க மறுக்கிருராம். அதுமட்டுமில்லாமல் முன்னே அவர் பாம்பேவுக்கு கடிதம் எழுதியதைப் பற்றியும் குற்றம் சாட்டுகிருராம். குற்றவாளியாக்கிவிட்டாராம்' இனி இறப்புதான் அவருக்கு சிறப்பு.

எனே : அப்படியாளுல் உலகமே, இனி நீ இரட்டைவரை இழந்தாய் எல்லாதேசமும், பாசமும் போய்விட்டது அண்டோனி எங்கே ?

இரா : அவர் தோட்டத்திலே உலவிக் கொண்டிருக்கிருர். அவர் நிலையைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கிருர். "மட லெபிடஸ்!" என்றும் கூறுகிருர். பாம்பேயின் கழுத்தைத் திருகிய தலைவனை தீர்த்துக் கட்டபோகிருராம்.

எனே : நம் பெரிய கப்பற் படை தயாராக வேண்டும்.

இரா. இத்தாலிக்கும் — சீசர் டோமிடியசிற்கும் கூட என் தலைவன் உன்னை வரச் சொல்லியிருக்கிருர். அது சொல்லத்தான் வந்தேன்.

எனே : சரி அண்டோணியிடம் அழைத்துச் செல்.

இரா : வா.

[இருவரும் போருர்கள்]

## காட்சி 6.

[ரோம் சீசரின் மாளிகையில் ஓர் அறை, சீசர் அக்ரிப்பா, மாகினஸ் வருகின்றனர்]

சீசர் ரோமை இகழ்ந்து, இதெல்லாம் செய்தான்; இன்னும் கூட அலெக்ஸாண்டரியாவில்—இப்படித்தான் செய்தார்களாம்-மக்கள் கூடும் சந்தியிலே, வெள்ளியிலான மேடையின் மீது தங்க அரியணையில் அவனும், கிளியோ பாட்ராவும் அமர்ந்து மக்கள் முன்னிலையில் பட்டம் சூட்டிக்கொண்டனர். அவர்கள் காலடியில், என் தந்தையின் மகன் என்று அவர்கள் சொல்லும், சீசெரியன் அமர்ந்திருந்தாளும். எகிப்தின் அரசியாக அவளை நியமித்தாளும். கீழே சிரியாவுக்கும், தைப்ரஸ், லிடியாவுக்கும் அவளை முழுராணியாக்கி விட்டாளும்.

மாசி : இவ்வளவும் மக்கள் முன்னிலையிலா?

சீசர் : ஆம். பொது மக்கள் கூடுமிடத்தில் தான். மன்னர்களுக்கு மன்னர்களாக அவள் மைந்தர்களை அறிவித்தாளும்: மீடியா, பார்த்தியா, ஆர்மேனியாவை அலெக்சாண்டருக்கு அளித்தாளும்; சிரியா, சிலிசியா, போனிஷியாவை டாளமிக்கு தானம் செய்தாளும்; அவள் அன்று ஐசில் தேவதையின் தோற்றமாகி தென்பட்டாளாம், — இப்படி சேதி கிடைத்திருக்குறது.

மாசி : இந்த சேதியை ரோம் அறியட்டும்.

அக்ரி : நல்லெண்ணம் நசித்துப் போய் வெறுப்புத்தான் ஏற்பட்டிருக்கிறது மக்களுக்கு, இப்பொழுது அவன்மீது.

சீசர் : அறிவர். அவன் கூறிய கடுரமொழிகளைக் கூட.

அக்ரி : யார் பற்றியது அது ?

மூலம் :

**சேக்ஸ்பியர்**

தமிழில் :

**இரா. மதனகோபால்**

பி.காம்.டி.ஐ.பி.

சீசரைப் பற்றியது. செக்டஸ் பாம்பியஸ் சூரையாடிய சிசிலியில் நாம் அவனுக்குரிய பங்கையளிக்கவில்லையாம். அவன் எனக்கு உதவிய கப்பல்களில் சிலவற்றை நான் அனுப்பவில்லையாம். திருப்பி பூவேந்தர்களில் ஒருவரான லெபிடசை நாம் ஒப்பந்தப்படி பரீட்சை செய்து பார்க்கவேண்டுமாம். அதனுல் நாம் அவனுடைய எல்லா வரியையும் தடுத்திருக்கிருேம்.

அக்ரி : இதற்கு நாம் பதில் கூறியே ஆக வேண்டும்.

சீசர் : நான் முன்னமேயே கொடுத்து விட்டேன். தூதனும் போய்விட்டான். லெபிடஸ் மிகவும் கொடியவனுகி விட்டான் என்றும் நான்தான் எல்லோருக்கும் தலைவன் கூறுவதாகச் சொல்லியனுப்பினேன் நான்பிடித்த நாடுகளில் பங்கு தருவதாகவும் கூறினேன். ஆனுல் அவனுடைய அர்மேனியாமற்றும் அவன் பிடித்த நாடுகளில் எனக்கு அதே பங்கு கேட்கிறேன்.

மாசி : இதற்கு ஒரு போதும் அவன் ஒப்ப மாட்டான்.

சீசர் : நானும் கூட மறுககப் போகிருேம்.

[அப்பொழுது ஆக்டேவியா வருகிருன்.]

ஆக்டே : வாழ்க சீசர் வாழ்க என் தலைவர்!

சீசர் : ஏன் வந்தாய் ? விரும்பாத இப்பொழுது ஏன் வந்தாய் ?

ஆக்டே : ஏன் இங்கு இப்படி வந்நாய் ? சீசரின் தங்கையைபோன்று நீ வரவில்லை நீ எப்படி வராவண்டுப்? பெரும் படையுடன் முன்னே ஆட்கள் பின்னே ஆட்கள் வர வர வேண்டும். உன்னுடன் வரும் பிறவிகளின் கனைப்பு ! நீ வருவதை அறிவிக்கவேண்டும்; இருபக்கமும் மக்கள் காத்திருந்து வரவேற்றிருக்க வேண்டும். எதிர் பார்த்தபடி ஏதும் நடக்கவில்லை. உன் படை வரும் வேகத்தால் எழும் தூசு மேகத்தை மறைத்து இருக்க வேண்டும். ஆனுல் நீ வந்தது எப்படி சாதாரண சந்தையின் வனிதையைப் போன்றல்லவா வந்திருக்கிருய்! அன்பின் அடையாளத்தை அழித்துவிட்டாய்! உன்னை நாங்கள் கடலிலோ அல்லது நிலத்திலோ சந்தித்து இருக்கவேண்டும், நல்ல வரவேற்பு கொடுத்து

ஆக்டே தலைவா ! அப்படி வருவதற்கு நான் விரும்பவில்லை. நீங்கள் போருக்கு ஆயுத்தமாயிருப்பதை தெரிவித்தார் என்னிடம் என் கணவர் பிறகு நான் அனுமதி கேட்டு வந்தேன்.

சீசர் : மகிழ்ச்சியோடு கொடுத்திருப்பேனே ! ஏனென்ருல் அவனுச்கும் அவனுடைய காமக்கன்னிக்கும் இடைஞ்சலாக நீ இருப்பாய் என்று அனுப்பியிருப்பான்.

ஆக்டே : அப்படிச் சொல்லாதீர்கள் அண்ணு !

சீசர் : அவன் நடவடிக்கைகள் எனக்கு தெரியும் அவன் எங்கே இப்பொழுது ?

ஆக்டே : அவர் ஏதென்சில் இருக்கிருர்!

சீசர் : இல்லை! என் தங்கையே, இல்லை. கிளியோபாட்ரா கண்வீச்சுக்கு அவன் இசைந்து அவளிடம் போய்விட்டான். அவன் தன் ஆட்சியை ஒரு வேசிக்கு கொடுத்து விட்டான். அவன் மற்ற அரசர்களுடன் போரிட புறப்பட்டு விட்டான். லிபியாவின் மன்னன் போகஸ், போடோஷியாவின், அர்சிலாஸ், பிலடெல்போஸ் அரேபிய அரசன் மால்கஸ்பாண்டின் மன்னன் ஜுவரியின் இரோடு, கோமோஜினியின் மன்னன் மித்திடேப்ஸ் போலிமென் மிடாவின் மன்னன் அமின்டாஸ் லியாகோனியாவின் அரசன் மற்றும் பல மன்னர்களின் உதவியுடன் போரிடப் போகிருன்.

ஆக்டே : ஆ ! மிகவும் துர்பாக்கியவதி நான். இருவரின் அன்பும் இறந்து விட்டதே. இனி என்ன இருக்கிறது எனக்கு.

சீசர் : கவலைப்படாதே தங்கையே ! உன் வரவு நல்வரவே உன்னைத் தவருன வழியில் செலுத்தி எங்களை அபாயத்திலாழ்த்த அவன் அப்படி செய்திருக்கிருன். கவலைப்படாதே நானிருக்கிறேன். வருத்தத்தை ஒழித்துவிடு. காலம் வழி செய்யும் தவருக உன்னைத் திட்டிவிட்டேன். மன்னித்துக் கொள். ரோமுக்கு உன் வரவு மகிழ்ச்சியே அளிக்கும், விரும்பியவர்களிடமே வந்து சோந்தாய். கவலையை ஒழித்து, கண்ணீரைத் துடைத்து மனதை தேற்றிக் கொள்.

அக்ரி : வாருங்கள் அம்மையாரே.

மாசி : வாருங்கள் அருமை அம்மையாரே ரோமின் ஒவ்வொரு இதயமும் தங்களை விரும்பும். அவை அனுதாபம் தெரிவிக்கும். ஆனுல் காமவெறியன் அண்டோனி வேசியின், ஆசையால் தங்களை அனுப்பிவிட்டான் பரத்தைக்கு அவன் நாட்டை கொடுக்க அவள் எங்களைப் பார்த்து சிரிக்கிருள். போர் தொடுக்க முனைகிருன்.

ஆக்னே : அப்படியா ஐயா ?

சீசர் : உண்மைதான், தங்கையே. பொறுமையோடிரு. மனதைத் தேற்றிக் கொள். வா போவோம்.

[எல்லோரும் போகிருர்கள்.]

[தொடரும்]

1-ம் பக்கத் தொடர்ச்சி.........

எனக்கு அறிமுகமான இரண்டொருவரைத் தவிர, மற்ற அத்தனை பேருடைய முகங்களும் எனக்குப் புதிதாகவே உள்ளன.

நான் எடுத்த—மேற்கொண்ட திட்டம் எத்தகைய வழியைக் காட்டுவதாக இருந்தாலும், என்னோடு அதைப் பகிர்ந்துகொள்பவர்கள் இந்த மாநாட்டில் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, 'இன்னும் தீவிரத் திட்டம் தீட்டாமல் இருந்துவிட்டோமே' என்ற எண்ணம் எனக்கு எழுகிறது!

இந்தச் சூழ்நிலையில் கோழையும் வீரனாவான்! அதனால்தான் 'பலாத்கார முறையில் அவசரப்பட்டுக் காரியத்தில் ஈடுபடக் கூடாது' என்ற கொள்கையுடனிருக்கிற நான்கூட, 'தீவிரத்தைக் காட்டவேண்டும்' எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இது, 'நேரடி நடவடிக்கை நடத்தவா, வேண்டாமா?' என்று பேசும் விவாத மேடையல்ல! அந்த முடிவு பொதுக் குழுவில் எடுக்கப்பட்டுவிட்டது!

ஆகையினால் இன்றைய மாநாட்டில் கூடியிருப்பது, மகா விண்ணப்பம் அனுப்புவதா—மாபெரும் தூது செல்லலாமா—என்று விவாதிப்பதற்கு அல்ல; போராட்டம் எந்த நாளில்—எந்த இடத்தில் நடக்கும் என்பதையும், யார் யார் கலந்துகொள்வார்கள் என்பதைத் தெரிவிக்கவும், அதற்கு நீங்களெல்லாம் உறுதியளிக்கவும்தான்.

தி. மு. கழகம் ஒரு அறப்போர் நடத்தவேண்டும் என்றதும், இப்படி ஒரு மாநாட்டைக் கூட்டி, இந்த மாதம் 5ந் தேதி போராட்டம் துவங்கும் என்று நான் அறிவித்திருக்கலாம். அதை நாடு அலட்சியப் படுத்தி விடாது—யாரும் வருத்தப்படவும் மாட்டார்கள்!

விலைவாசிப் போராட்டம்கூட மூன்று நாளைக்கு முன்னதாகத்தான் அறிவிக்கப்பட்டது; மூன்று நாட்கள்தான் இடைவெளி இருந்தது.

ஆனாலும், அந்த ஒரே நாள் போராட்டத்தில் ஏறக்குறைய 18000 பேர் வரை கலெக்டர் தாசில்தார் அலுவலகங்களின் முன் முறைப்படி அணிவகுத்து மறியலை நடத்திக் காட்டினார்கள்!

காந்தியார் காலத்திற்குப்பிறகு, இப்படி ஒரு பெரிய போராட்டம்—ஒரே நாளில் 18000 பேர் சிறை சென்ற வரலாற்றை உருவாக்கிய கட்சி இருக்குமானால், அதை எனக்குக் காட்டுங்கள்! அது இருக்கும் திக்குநோக்கி நான் தெண்டனிடுகிறேன்.

1938ல் இந்தி எதிர்ப்புப் போர் நடத்தியபோது, பெரியாருக்கு என்மீது அளவுகடந்த நம்பிக்கை இருந்த காரணத்தால் என்னை முதல் தளபதியாக நியமித்தார். அப்போது — நாங்கள் போராட்டம் நடத்திய நேரத்தில் எங்களைக் கைது செய்த பெரிய போலீஸ் அதிகாரிகள், இப்போது ஓய்வுபெற்று இந்த மாமன்றத்தில் கூட உட்கார்ந்திருப்பார்கள்.

எனவே, அப்போதிருந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை விடப் பல மடங்கு, இப்போது உணர்ச்சியும் எழுச்சியும் பெருகியுள்ளன.

இந்நிலையில், போராட்டத்தை துவக்குவது என்றால், பொதுக் குழு முடிவெடுத்த அடுத்த வாரத்திலேயே போராட்டத் திட்டத்தை நான் அறிவித்திருக்க முடியும்.

சில அவசர அரசியல்காரர்கள் கூடக் கேட்கின்றார்கள்—'ஏன் போராட்டத்துக்கு அண்ணாதுரை யோசிக்கிறான்? என்று! கையில் பொருள் இல்லாதவன் எதையும் துணிந்து செய்வான்; கொஞ்சம் பொருள் சேர்த்தவன் யோசித்துத்தான் செய்வான். ஆளில்லாத கட்சித் தலைவர்கள் ஆயிரத்தெட்டு திட்டங்கள் தரலாம்; ஆயிரத்துக்கு மேல் என்னிடம் ஆள் இல்லையென்றால், வியாழக்கிழமை ஒரு போராட்டம், வெள்ளிக்கிழமை ஒரு போராட்டம் என்று அறிவித்துக் கொண்டே இருக்கலாம். நமக்கு 5691 கிளைக்கழகங்கள் இருக்கின்றன.

இங்கே நடந்த ஊர்வலத்தில், சேலம்மாவட்டம் செந்தாரப்பட்டியிலிருந்துகூட மோட்டார் வண்டியில் வந்து கலந்துகொண்ட தோழர்களைக் கண்டோம்.

பட்டிதொட்டி - சிற்றூர்களெல்லாம் கழகம் வளர்ந்திருக்கிறது. 15 ஆண்டு உழைப்பும் பல தோழர்கள் சிந்திய இரத்தமும் இந்த வளர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது.

இந்தக் கழகத்தைக் கட்டிக் காக்கவேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது.

நான் எந்தக் கட்டளையிட்டாலும் அது நிச்சயம் நடக்கும்—அதிலே எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

இன்று எல்லாத் தந்திக் கம்பிகளையும் அறுக்க வேண்டும் என்று கட்டளையிட்டால், துப்பாக்கியால் சுடுவோம் என்று அமைச்சர்கள் சொல்லுவார்கள் என்பதும் எனக்குத் தெரியும்!

துப்பாக்கியால் சுட்டால் உயிர் போகும்—அதுவும் தெரியும்!

ஆனால், போன உயிர் போக மிச்ச உயிர்கள் இருப்பதை அமைச்சர்கள் கணக்கிடத் தவறிவிடுகிறார்கள்!

எந்தக் கிளர்ச்சியையும் அரசாங்கம் அடக்கலாம்; சில காலத்திற்கு அடக்கலாம்—பல காலத்திற்குக்கூட அடக்கி வைக்கலாம்; ஆனால் எல்லாக் காலங்களிலும் அடக்கிவைக்க முடியாது.

இரண்டு நாட்களுக்கு முன்பு 'இந்து' பத்திரிகை ஒரு கேலிச் சித்திரம் வரைந்தது; அதில் அமைச்சர் பக்தவத்சலம் நிற்கிறார். அவருக்குப் பின்னால் அவரைவிடப் பெரிய உருவில் தரைப்படை, கடற்படை, விமானப் படை தளபதிகள் நிற்கிறார்கள்; பக்தவத்சலம் ஓர் ஒலி பெருக்கி வைத்துக் கொண்டு 'இந்திய ஒற்றுமை, — 'இந்திய அரசுரிமை'—'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்கியே தீருவோம், என்று சொல்லுவது போல் சித்தரிக்கப்பட்டிருந்தது.

இந்தப் படத்தை வெளியிட்டதன் மூலம் 'இந்து' பத்திரிகை, அமைச்சர் பக்தவத்சலத்தை மறைமுகமாகக் கேலி செய்திருக்கிறது என்றுதான் பொருள்.

அமைச்சர் பக்தவத்சலத்துக்குப் பின்னால் கக்கன், வெங்கட்ராமன், மன்றாடியார் முதலிய அமைச்சர்களைப் போட்டிருந்தால், இந்த அமைச்சர்களிடத்திலே மதிப்பு வைத்திருப்பதாகக் கருதலாம்.

இதை விடுத்து முப்படைத் தளபதிகளைப் பெரிய உருவில் போட்டு, பக்தவத்சலத்தை மட்டமான உயரத்தில் போட்டது எதற்காக?

இத்தனைப் படைகளையும் வைத்துக்கொண்டு, பைத்தியக்காரன் கூட உலகத்தை ஆளலாம்—பக்தவத்சலம் தேவை இல்லை!

என்னிடம் அந்த மூன்று படைகளையும் கொடுத்தால் இந்தப் போராட்டத்தையா நடத்துவேன்?

தமிழன் ஒரு காலத்தில் எந்தெந்த இடத்தில் கொடிகட்டி ஆண்டானோ அங்கெல்லாம் நாம் ஆளவேண்டும் என்றல்லவா போராட்டம் இருக்கும்?

ஆனால், என்னிடத்தில் இருக்கின்றபடை இதுதான் (மேடையில் இருந்த முன்னணி வீரர்களைச் சுட்டிக்காட்டினார்) இந்தப் படையைச் சாமான்யம் என்று கருத வேண்டாம்.

வருங்காலப் படைத் தளபதிகள் கூட, இங்கே உங்களோடு ஒருவராக வீற்றிருக்கக் கூடும்; இப்போது அவர் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

சீனாவில் மா-சே-துங் என்ற ஒருவர் ஆட்சிக்கு வருவார் என்று அதற்கு முன்னாலே யாருக்குத் தெரியும்?

அயூப்கான் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் அவர் பாகிஸ்தான் மக்களின் கண்ணுக்குத் தெரிந்திருக்கவில்லை!

இரண்டு கெட்டவர்களைச் சுட்டிக்காட்டினேன்; நல்லவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக ஹோ-சி-மின் அவர்களைச் சொல்கிறேன். ஹோ-சி-மின் பதவிக்கு வருமுன் அப்படி ஒரு தலைவன் இருக்கிறான் என்று இந்தோ-சீன மக்கள் கனவுகூட காணவில்லை!

ஆகையினாலேதான் 'எதிர்காலம் ஆண்டவனின் மடியில் இருக்கிறது; என்று சொன்னார்கள்!

என்னிடத்திலே உள்ள இந்தப் படையையும் காட்டினேன் இது சாதாரண படையல்ல—இவர்கள் நாடறிந்த நண்பர்கள்! நல்ல திட்டங்களைத் தீட்டிக் கொடுக்கக் கூடியவர்கள்!—எனவே, எனது போராட்டம் அறப் போராட்டமாகவே இருக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

"அண்மையில் துறையூரில் முதலமைச்சர் பக்தவத்சலம் பேசியதாக நண்பர்கள் சொன்னார்கள்; பத்திரிகைகளிலும் படித்தேன்; அவர்தான் அப்படிப் பேசினாரோ—பத்திரிகைக்காரர்கள்தான் கூட்டிக் குறைத்துப் போட்டார்களோ—தெரியாது; 'தி.மு.க. போராட்டத்தைக் கண்டு பயப்படமாட்டேன்; இந்தப் பூச்சாண்டிகளுக்கெல்லாம் பயந்தவனல்ல நான்' என்று பேசினாராம்!

அமைச்சர் பக்தவத்சலத்துக்கு வயது 66—பயம் ஏற்படவேண்டிய அவசியம் இல்லாத வயது; ஆனால் எனக்கு வயது 55—பூச்சாண்டி காட்டுகிற வயதல்ல! இதையும் அவர் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு முப்பதாண்டுகளுக்கு முன்னால் சொன்னாலும் நம்பலாம்;

(அடுத்த பக்கம் பார்க்க)

## கோ. சு. மணி குடும்பத்துக்கு ரூ. 3000 நிதி உதவி

விலைவாசி குறைப்பு அறப்போராட்டத்தின்போது சிறை சென்று மாண்ட தோழர் கோ. சு. மணியின் குடும்ப உதவி நிதியாக, தலைமைக்கழக சார்பில் 13—10—63 அன்று ரூ. 3000 அளிக்கப்பட்டது.

கோ. சு. மணியின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டு அரங்கில், கோ. சு. மணியின் தந்தையாரிடத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நிதியை அளித்தார்கள்.

கோ. சு. மணியின் தந்தையார் கண்கலங்க நிதியைப் பெற்றுக் கொண்டு வணக்கம் தெரிவித்துக் கொண்டார். நிதியைப் பெறும்போது அவர், தன் பேரனையும் (கோ. சு. மணியின் மகன்) இடுப்பில் தூக்கிவைத்திருந்தார். தம் தனயனின் குடும்பத்துக்காகத் தாம் பெற்ற நிதியை, பேரனின் கையில் கொடுத்த காட்சி உருக்கமாக இருந்தது.

நிதியளிக்குமுன், தலைமைக் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள், கழகம் அன்று முதல் இன்றுவரை, பாதிக்கப்பட்ட எந்தக் கழகத் தோழர் குடும்பத்தையும் கைவிட்டதில்லை என்பதையும், தளபதி அகிகிரிசாமி குடும்பம் முதல் பொற்செழியன் குடும்பம்வரையுள்ள நீண்ட தியாகிகள் குடும்பப் பட்டியலையும் தெரிவித்து, அவர்கள் குடும்பங்களுக்குச் செய்த உதவியையும் அறிவித்தார்.

பதிவு எண்: 7178 | திராவிடன் | தொலைபேசி 33581

# வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்வலம்
# மொழி காக்க வழி காட்டிய மாநாடு!

இந்தி எதிர்ப்புப் பொது மாநாட்டினையொட்டி, 13—10—'63 அன்று சென்னையில் எழுச்சிமிக்க மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

ஏராளமான தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் ஊர்வலத்தில் பங்குகொண்டனர். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்த இந்த ஊர்வலம், மாநகர மக்களிடையே இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை மேலும் தூண்டுவதாக அமைந்திருந்தது.

இராயபுரம் 'அறிவகத்'திலிருந்து காலை 10 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம், கொதிக்கும் வெயிலில், சுமார் ஆறு மைல் தொலைவைக் கடந்து மாநாட்டுத் திடலையடைய பிற்பகல் 2-30 மணி ஆயிற்று!

மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா, திறப்பாளர் க. அன்பழகன், அவைத்தலைவர் இரா. நெடுஞ்செழியன், வரவேற்புக் குழுத் தலைவர் மு. கருணாநிதி, வ. கு. செயலாளர் என். வி. நடராசன், தலைமைக்கழக செயலாளர்களான கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு உறுப்பினரும் மாவட்ட செயலாளர்களுமான சி. வி. எம். அண்ணாமலை, மன்னை நாராயணசாமி, அன்பில் தருமலிங்கம், இரா தர்மலிங்கம், மற்றும் தோழர்கள்

—(0)—

## சென்னைத் திருநகரில் சிறப்புமிகு நிகழ்ச்சிகள்!

டி. எம். பார்த்தசாரதி, அ. செல்வராசன், விழுப்புரம் சண்முகம் ஆகியோர் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் அமர்ந்து வந்தனர்.

ஆயிரக்கணக்கான சைக்கில்களில் தோழர்கள் கொடியேந்தி முன்செல்ல, அவர்கள் பின்னே பல்வேறு கருத்துக்களை விளக்கும் அலங்கார டிரக் வண்டிகளும், வெளியூர்களிலிருந்துவந்த பஸ்களும் வரிசையாகச் சென்றன.

இந்திஅரக்கிவேடந்தாங்கியும், விடுதலை வீரனின் உருவம் அமைத்தும், தாளமுத்து—நடராசன் கல்லறைபோல் அமைத்தும் தாளமுத்து-நடராசன், கோ. சு. மணி ஆகியோர் பிணமாகக் கிடந்த நேரத்தில் அவர்தம் பெற்ரோர், உற்ரார் உறவினர் அலறி துடித்துக் கதறியழுதகாட்சியை எடுத்துக்காட்டும் காட்சிகளையும், சிறைக் கொடுமையையும் டிரக் வண்டிகளில் அமைத்து உருவாக்கியிருந்தனர்.

ஊர்வலம் சென்ற வழிநெடுகிலும் கொடி—தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும், வரவேற்புப் பந்தல்கள் அமைக்கப்பட்டும் இருந்தன.

ஆங்காங்கே, தலைவர்களுக்கு மாலையணிவித்து வரவேற்புளிக்கப் பட்டது.

பல இடங்களில், தோழர்களின் நாவரட்சியைத் தீர்க்க தண்ணீரும், நீர்மோரும் வழங்கப்பட்டன.

ஊர்வலத்தின் பின்னாலேயே குடிநீரும், நீர்மோரும் ஏந்திக் கொண்டு ஒரு டிரக் வந்தது. அதில் இருந்தபடியே தோழர்கள் தண்ணீரும் நீர்மோரும் வழங்கிய வண்ணமிருந்தனர்.

ஃ

இந்தி எதிர்ப்பு மாநாடுகள் வரிசையில் இறுதியானதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான இந்தி எதிர்ப்புப் பொதுமாநாடு 13-10-63 அன்று சென்னையில் சீரும் சிறப்புமாக நடந்தேறியது.

கோடம்பாக்கம்-நுங்கம்பாக்கம் இடையே உள்ள திடலில் மறைந்த மாவீரர் கோ. சு. மணியின் பெயரால் அமைக்கப்பட்டிருந்த அரங்கில் மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாநாட்டில், சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்கள், ஆந்திர மாநிலம் ஆகிய பகுதிகளிலிருந்து மட்டுமின்றி, திராவிடத்தின் மற்றப் பகுதிகளிலிருந்தும் ஏராளமான தோழர்கள் வந்து கலந்து கொண்டனர்.

மாநாட்டுத் திடல்நிரம்பி வழியுமளவுக்கு மக்கள் குழுமியிருந்ததுடன், திடல் சுற்றடைப்புக்கு வெளியிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்து மாநாடு முடியும் வரை பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

ஊர்வலம் மாநாட்டுத் திடலை அடைந்தவுடன் பிற்கல் (2-30 மணிக்கு) திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் கோ. சு. மணி அரங்கின் எதிரே, உயர்ந்த கம்பத்தில் இருவண்ண கொடியை ஏற்றுவித்தார்.

பின்னர், சிறிது இடைவேளைக்குப் பின் மாநாடு துவங்கியது.

சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சியும், சேலம் சீனிவாசனின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

பிறகு சி. பி. சிற்றரசு அவர்கள்கொடியேற்றுரைநிகழ்த்தினர். அடுத்து அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மாநாட்டின் குறிக்கோள்பற்றி எடுத்துக் கூறிப் பேசினர்.

அடுத்து வரவேற்புக் குழுத் தலைவர் மு. கருணாநிதி அவர்கள் வரவேற்புரையாற்றி, அண்ணா அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்குமாறு முன்மொழிந்தார்.

அதனை வழிமொழிந்துமுறையே தோழர்கள் நீலநாராயணன், இரா. தருமலிங்கம் எம்.பி., சி. வி. எம். அண்ணாமலை, வீரநாராயனன் (தெலுங்கில்) திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, கே. ஏ. மதியழகன், கி. மனோகரன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள், தலைமையேற்று, சுமார் 2-மணி நேரம் போராட்டத்தின் நோக்கத்தையும், காரண காரிய விளக்கங்களையும் விரிவாக எடுத்துரைத்ததுடன் போராட்டத் திட்டத்தையும் அறிவித்தார்கள்.

அண்ணா அவர்களின் உரை இரவு 10-20.க்கு முடிந்தது. அடுத்து முரசொலி நாடக மன்றத்தாரின் 'மாற்ருன் தோட்டத்து மல்லிகை' — 'வஞ்சியும் காஞ்சியும்' என்ற நாடகங்கள் நடைபெற்றன. இத்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

○

---

இப்போது பூச்சாண்டி காட்டக் கூடிய நிலையில் நானும் இல்லை— பூச்சாண்டி காட்டுவதற்காகவும் போராட்டம் நடத்தவில்லை! அமைச்சர்களைப் பயமுறுத்தவும் அல்ல!

நான் பயப்படமாட்டேன்— என்று பக்தவத்சலம் சொல்கிருர்; அவருக்குப் பயம் காட்ட இந்தப் போராட்டம் தேவையில்லை. அதற்கு நாங்கள் தேவையில்லை. இரண்டு காரியங்கள் நடந்தால் போதும்; ஒன்று— மேலும் எந்தெந்த அமைச்சர்கள் விலக வேண்டும் என்று நேரு யோசித்துக் கொண்டிருக்கிருர்; அந்தப் பட்டியலில் பக்தவச்சலத்தின் பெயர் முதலிலே இருக்கிறது என்று பத்திரிக்கைகாரர்கள் ஒரு நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து செய்தி போட்டால் போதும்!

"இன்னென்று -அனைத்திந்திய காங்கிரசுத் தலைவராகியுள்ள காமராசர், நான் அங்கேயே இருந்தால் தமிழ்நாட்டைக் கவனிக்கமுடியவில்லை; மீண்டும் தமிழ்நாட்டுக்கே திரும்பப் போகிறேன் என்று தெரிவித்ததாக நமது தனி நிருபர் தெரிவிக்கிருர்' என்று ஒரு வாரம் செய்தி போட்டால் போதும்; அவருக்குப் பயம் ஏற்பட்டுவிடும். மன்னவன் என்னைக் கண்டா பயந்து விட்ப்போகிருர்?

இந்தப் போராட்டம் யாரையும் பயமுறுத்தவும் அல்ல—எங்கள் வலிமையைக் காட்டி மிரட்டவுமல்ல-மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்ற அற்ப ஆசையாலும் அல்ல; 'இதைத் தவிர வேறு முறை இல்லை; பரிகாரம் இல்லை' என்ற முடிவுக்கு வந்த பிறகுதான் இதில் ஈடுபட்டுள்ளோம்.

வள்ளி, யானையைக் கண்டு பயந்து, சுப்பிரமணியரை அணைத்துக்கொண்டதுபோல —'பக்தவத்சலம், போராட்டத்தைக் கண்டு பயந்து எங்களை அணைத்துக் கொள்வார்' என்று எதிர்பார்த்தா போராட்டம் நடத்துகிருேம்?— அல்ல நண்பர்களே அல்ல! அவருடைய வார்த்தைக்கு—அவருடைய கரத்துக்கு டில்லியிலே மதிப்பு ஏற்படத்தான் இந்தப் போராட்டம்!

எங்கள் மாநிலத்தில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி மிகவும் வலுத்திருக்கிறது; சீன ஆக்கிரமிப்பின் போது ஏற்பட்ட தோழமை உணர்ச்சி இந்தியால் பாதிக்கப்பட்டிருக்கிறது' என்று, டில்லியில் தைரியமாக எடுத்துச்சொல்ல அவருக்கு இந்தப் போராட்டம் துணைசெய்யும்; எனவே, இந்த நோக்கத்தை அரசினர் புரிந்து கொள்ள வேண்டும்."

○

---

## தமிழகப் புலவர் குழு

—(○)—

### புதுச் சேரிக்கு வருகை

தமிழகப் புலவர் குழுவின் 14-வது கூட்டம் 20—10—'63 ஞாயிறு அன்று புதுச்சேரியில் கூடுகிறது. காலை ஒன்பது மணிக்கு செயற்குழுவும், மாலை 3 மணிக்கு வேதபுரீசுரர் நூல் நிலையத்தின் முன் பொதுக் கூட்டமும் கூடும்.

புலவர் பெருமக்களைச் சிறப்பாக வரவேற்க நகர மக்கள் அடங்கிய ஒரு வரவேற்புக் கழகம் அமைக்கப் பெற்றிருக்கிறது. நகராட்சியினர் வரவேற்பு அளிப்பர் எனவும், தலைவர் திரு. குபேர் அவர்கள் பங்கு பெறுவர் எனவும் தெரியவருகிறது.

புலவர் பெருமக்கள் தங்கள் வருகையையும், பொதுமக்கள் தங்கள் எண்ணத்தையும் "தமிழகப் புலவர் குழு அலுவலகம், 116, முத்துமாரியம்மன் கோவில் தெரு, புதுச்சேரி" என்ற முகவரிக்கு எழுதலாம் என அதன் அமைப்பாளர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அறிவிக்கிருர்.

ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1